உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், சத்திரப்பட்டி ஊராட்சியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடத்தை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளை வழங்கினார். அருகில் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி அய்யம்மாள், துணைத்தலைவர் திருமதி காயத்ரி தேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன் உட்பட பலர் உள்ளனர்.

அனைத்துத் துறைகளும்

வளர்ச்சி அடைய வேண்டும் என்பதே முதல்வரின் விருப்பம்!

அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜூலை 12-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி சிங்கம்புணரி எஸ்.மாம்பட்டி ஊராட்சி ஒப்பிலான்பட்டியில்எருமைப்பட்டியிலிருந்து தும்பைபட்டி வரை ரூபாய் 2 கோடியே 95 லட்சம் செலவில் நபார்டு ஊரக சாலை திட்டத்தின் கீழ் மேம்பாலம் கட்டும் திட்ட பணிதுவக்க விழா மாவட்ட வருவாய் அலுவலர் ப.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது. நபார்டு கோட்டப் பொறியாளர் வரவேற்றுப் பேசினார்.

திட்ட பணிகளை துவக்கி வைத்து கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:-

இப்பொழுது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. எஸ்.மாம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஒப்பிலான்பட்டியில் இருந்து எருமைப்பட்டி தும்பை பட்டி வரை இந்த பாலம் அமைக்கப்படுகிறது .இதனால் இந்த ஊரை சுற்றிஉள்ள பல் வேறு கிராமங்கள் பயன் பெறும் இந்த பாலம் அமைவது இப்பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் .

தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெற வேண்டும் என்று விரும்புகிறார். அந்த வளர்ச்சி அடிப்படை வசதிகளையும் கிராம மக்களின் முன்னேற்றத்தினை மையமாக கொண்டதாக சமமாக அமைய வேண்டும் என்று விரும்புகிறார். இதற்காக பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அவைகள் நிறை வேற்றப்பட்டு வருகிறது. கிராமங்கள் முதல் நகரங்கள் வரை சமமான சீரான வளர்ச்சி பெற வேண்டும் என்பதே முதல்வரின் விருப்பமாகும். அதுதான் திராவிட மாடல் ஆட்சி ஆகும்.

அனைத்து கிராமங்கள் முதல் நகரங்கள் வரை அடிப்படை வசதிகள் வளர்ச்சிகள் சரி சமமாக இருக்கவேண்டும். அனைவருக்கும் எல்லாம் கிடைத்திட வேண்டும் என்பது தான் முதல்வரின் விருப்பம் ஆகும். இதனால் மாநிலத்தில் வளர்ச்சி சிறப்பாக அமையும் என்று விரும்புகிறார். அதற்கேற்ப திட்டங்களை அறிவித்து அதனை செயல்படுத்தியும் வருகிறார். எனவே முதல்வரின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு நாம் தொடர்ந்து ஆதரவினை தர வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் ஏ.கே.மதிவாணன், ஊராட்சி மன்ற தலைவர் தாமரைச்செல்வம் ஒன்றிய செயலாளர் மல்லை கே. பால சுப்பிரமணியன், துணைச் செயலாளர் முத்துக்குமார், ஒன்றிய கவுன்சிலர்கள் மாதுஇளங்குமரன், உதயசூரியன், பொதுக் குழு உறுப்பினர் பி.ஆர்.பெருமாள்,அம்பல காரர் ராஜ ராஜன், மாவட்ட காங்கிரஸ் செயலாளர் உலகநாதன், ஒப்பந்ததாரர் எம். ஏ. நாதன்,

நிர்வாகிகள் புகழேந்தி, ரவிச்சந்திரன், பில்லப்பன், விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் நாக ராஜன், மல்லை மகேந்திரன், தென்னரசு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், புதூர் கண்ணன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அறிவுச் செல்வம், வட்டாட்சியர் சாந்தி, உட்பட கிராமத் தார்கள்,அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

கனிமொழி கருணாநிதி எம்.பி. நிகழ்ச்சிகள்!

அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்களும் நானும் (சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான பி.கீதா ஜீவன்) கலந்துகொள்ளும் நிகழ்ச்சி நிரல் விவரம் வருமாறு:- **12.07.2023**

நேரம்	நிகழ்ச்சி நடைபெறும் இடம்	ஒன்றியத்தின் பெயர்	நிகழ்ச்சி விபரம்
காலை 9.00 மணி	கட்டாலங்குளம்	கயத்தாறு மேற்கு ஒன்றியம்	ரூ.1.60 கோடி மதிப்பில் புதியதாக கட்டப்பட இருக்கும் உயர்மட்ட பாலம் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொள்ளுதல்.
காலை 10.00 மணி	கழுகுமலை	கயத்தாறு மேற்கு ஒன்றியம்	பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டப்பட இருக்கும் புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அடிக்கல் நாட்டு விழா.
காலை 10.30 மணி	கழுகுமலை	கயத்தாறு மேற்கு ஒன்றியம்	ரூ.50.00 இலட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள பூங்கா திறப்பு விழா.
காலை 11.00 மணி	தெற்கு கழுகுமலை	கயத்தாறு மேற்கு ஒன்றியம்	மக்கள் களம் – நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.
காலை 11.30 மணி	வெங்கடேஸ்வர புரம்	கயத்தாறு மேற்கு ஒன்றியம்	மக்கள் களம் – நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.
காலை 12.00 மணி	துரைச்சாமிபுரம்	கயத்தாறு மேற்கு ஒன்றியம்	மக்கள் களம் – நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.
மாலை 3.00 மணி	K.R. பங்களா, நாலாட்டின் புதூர்	கோவில்பட்டி	கோவில்பட்டி நகரம் இளையரசனேந்தல் ரோட்டில் இரயில்வே சர்வீஸ் ரோடு சம்பந்தமான அதிகாரிகளின் ஆய்வுக் கூட்டம்
மாலை 3.30 மணி	கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம்	கோவில்பட்டி	மாற்றுத் திறனாளிகளுக்கான நலத் திட்ட உதவிகள் வழங்குதல்
மாலை 4.00 மணி	செட்டிக்குறிச்சி	கயத்தாறு மத்திய ஒன்றியம்	பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டப்பட இருக்கும் புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அடிக்கல் நாட்டு விழா மற்றும் மக்கள் களம் – நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.
மாலை 5.00 மணி	திருமங்கல குறிச்சி ஊராட்சி, பெரியசாமிபுரம்	கயத்தாறு மத்திய ஒன்றியம்	புதியதாக கட்டப்பட்டுள்ள கால்நடை கிளை மருத்துவமனை திறப்பு விழா மற்றும் மக்கள் களம் – நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.
மாலை 6.00 மணி	உசிலங்குளம்	கயத்தாறு மத்திய ஒன்றியம்	மக்கள் களம் – நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.
மாலை 6.30 மணி	அய்யனாரூத்து	கயத்தாறு மத்திய ஒன்றியம்	தூத்துக்குடி பாராளுமன்ற நிதியில் இருந்து ரூ.20.00 லட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுதல்.

அமைச்சர் பி.கீதாஜீவன்
செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

சுதந்திரப் போராட்ட மாவீரன் அழகு முத்துக் கோன் அவர்களின் 313 குருபூஜை நிகழ்வில் அவர்களது திருஉருவச் சிலை மற்றும் திருவுருவப் படத்திற்கு இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, தலைமையில் மலர் தூவி மரியாதை செய்தனர். உடன் செ.முருகேசன், எம்.எல்.ஏ, வி.வாசு தேவன் கே.கருப்பையா, கமுதி, சண்முக நாதன், மனோகரன், அய்யனார்,பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, பரமக்குடி மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, ஜெயக்குமார், மாயகிருஷ்ணன், சந்திரசேகர் மற்றும் சண்முகப்பிரியா ராஜேஷ், பார்த்திபனூர் ஊராட்சி மன்ற தலைவர் சரண்யா சதீஷ், வேலாயுதம், காளிதாஸ் மற்றும் கணேசரத்தினம் மற்றும் பலர் உள்ளனர்.

மதவாத சக்திகளை அப்புறப்படுத்த

கழகத் தலைவர் தலைமையில் அணி திரள்வோம்!!

பாரதீய ஜனதாக் கட்சியும், ஆர்.எஸ்.எஸ். இயக்கமும் இணைந்து எதிர்க்கட்சிகளுக்கு விடுத்திருக்கும் சவால் என்பது தேர்தல் சார்புடையது மட்டுமல்ல, மாறாக இங்கு நிலவிடும் பன்முக கலாச்சாரம், அரசியல், மக்கள் மனநிலை, மதம் மற்றும் சமூகம் ஆகியவற்றின் மாற்றங்களுக்கான சவால்களும் இணைந்தே உள்ளது (Page No.70, "THE CROOKED TIMBER OF NEW INDIA"). பாரதீய ஜனதாக் கட்சியின் தேர்தல் வெற்றிக்கும், பலத்திற்கும், அரசியல் செல்வாக்கிற்கும் காரணம் அவர்கள் பல்லாண்டு காலமாக மக்கள் மத்தியில் ஊடுருவிச் சென்று செய்த பிரச்சாரத்தினாலும், சமீபகாலமாக அவர்கள் நடத்திவரும் மதம் - கலாச்சாரம், சமூகம் சார்ந்த இந்துக்கள் - "இந்துத்துவா" ஆகிய அடையாளங்கள் பற்றிய ஆர்வத்தையும், அச்சத்தையும் உருவாக்கக்கூடிய பிரச்சாரங்களின் பயனாகத்தான் தேர்தலுக்கான பலத்தையும் அரசியல் செல்வாக்கையும் அவர்கள் பெற்றுள்ளார்கள் .

இங்கு மேற்கோள் காட்டியுள்ள கருத்துக்களை தனது சமீபத்தில் வெளிவந்த ஆங்கிலப் புத்தகமான "The Crooked Timber of New India" ஆசிரியர் பரகாலா பிரபாகர், பொதுவெளியில் மக்களின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் முன்வைக்கிறார். இவர் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் மட்டுமல்ல, இந்திய ஒன்றிய அரசின் நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீத்தாராமன் அவர்களின் கணவருமாவார்.

அவரே இத்தகைய கருத்துக்களை மக்களின் கவனத்திற்கு முன்வைக்கிறார் என்றால் எத்தகைய முறையில் மதவாத கருத்துக்களை, "கலாச்சார தேசியம்" என்ற போர்வையில் இந்துத்துவாக் கோட்பாட்டையும், இந்துக்களின் எண்ணிக்கை பலத்தையும் ஊன்று கோலாக்கி தங்களின் அதிகார நாற்காலியை உறுதிப்படுத்திக் கொள்ளவும், இந்தக் கருத்துக்களை உள்ளடக்கிய "இந்து ராஷ்ட்ரத்தை" உருவாக்குவோம் என்ற முழக்கங்களை முன்வைப்பதும், எண்ணிக்கையில் அதிகமாக உள்ள இந்துக்களுக்குதான் அரசியல் அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்ற ஏமாற்றும் நச்சுக் கருத்துக்களையும் உருவாக்கி அதன்மூலம் சிறுபான்மை மக்களை அச்சுறுத்தி நிரந்தரமாக அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் முயற்சியில் தொடர்ந்து பல்லாண்டு காலமாக, பாரதீய ஜனதாக்கட்சியும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், அதன் கிளை அமைப்புகளும் குக்கிராமங்கள் தொடங்கி, பெருநகரங்கள் வரை இதற்கான உள்கட்டமைப்புப் பணிகளை தொடர்ந்து கட்டமைத்துக் கொண்டிருக்கின்றன.

பொன்.முத்துராமலிங்கம்
முன்னாள் அமைச்சர்,
கழக உயர் நிலை
செயல் திட்டக்குழு
உறுப்பினர்

குறிப்பாக, பிரதமர் மோடியின் 2022-ம் ஆண்டில் நாட்டு மக்களுக்கான நீண்ட சுதந்திர தின உரை இந்தக் கருத்துக்களை உள்ளடக்கிய உரையாகும். இந்த உரையில்தான் அவரது தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆட்சி என்பது "தேவாமிர்தகால ஆட்சியின்" (Amrit Kaal, the Ambrosial) தொடக்கம் என்று குறிப்பிடுகிறார்.

இந்த உரையில் பாகிஸ்தான் பிரிவினையின் பொழுது ஏற்பட்ட கலவரங்களின் கொடுமைகளைப் பற்றி 70 ஆண்டுகளுக்குப் பின்னர் விவரித்துவிட்டு, பிரதமர் நரேந்திரமோடி இந்திய நாட்டு மக்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுக்கிறார். "நாட்டுமக்கள் அனைவரும் லஞ்சம், ஊழல் ஆகிய நோய்களுக்கு எதிராகதான், எடுக்கும் தீவிர நடவடிக்கைகளுக்கு துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்".

பிரதமர் மோடியின் சுதந்திர தின இந்த உரை குறித்து ஆசிரியர் பரகாலாபிரபாகர் தன்னுடைய ஐயப்பாட்டையும், அச்சத்தையும் வெளிப்படுத்துகிறார்!! பிரதமரின் இந்த உரை என்பது மாநில ஆட்சி நிறுவனங்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், ஒன்றிய அமலாக்கத்துறையை இயக்கிவிட்டு எதிரணியில் உள்ள அரசியல் தலைவர்களை ஊழல் பேர்வழிகள் என மக்கள் மத்தியில் அடையாளப் படுத்துவதற்கான சோதனையின் வெள்ளோட்டமாகத்தான் இந்த உரையை மதிப்பீடு செய்ய முடிகிறது எனக் குறிப்பிடுகிறார்!!

ஆசிரியர் பரகாலாபிரபாகர், பிரதமரின் சுதந்திரதின உரை மேலும் சில அச்சங்களையும், அதிர்ச்சிகளையும் உருவாக்குகிறது எனத் தெரிவிக்கிறார். பிரதமர் மோடி இஸ்லாமியர்களின் ஆட்சிக்கு முந்திய "இந்து - இந்தியாவை" மீண்டும் உருவாக்கத் திட்டமிடுவதாகத் தெரிகிறது என்றும், அதுமட்டுமல்ல, ஒரே அரசியல் கட்சி மட்டும்தான், மற்றைய எதிர்க்கட்சிகள் எல்லாம் ஊழல் கட்சிகள் என மக்கள் மத்தியில் அடையாளப்படுத்துவதென்றும், அவசியம் ஏற்பட்டால் எதிர்க்கட்சித் தலைவர்களை சிறையில் அடைத்துவிட்டு, "இந்துத்துவா சர்வாதிகார ஆட்சியை" எதிர்காலத்தில் உருவாக்கும் திட்டமும் இதில் உள்ளடக்கமாவிருக்கிறது எனவும் அதில் தெரிவிக்கிறார் பிரதமர் மோடி எத்தகைய அபாயகரமான நிலைக்கு நாட்டை உட்படுத்தவுள்ளார் என்பதை மோடியின் அமைச்சரவையில், நிதியமைச்சர் பொறுப்பில் உள்ள நிர்மலா சீத்தாராமனின் கணவர் பரகாலா பிரபாகர் பகிரங்கமாகத் தெரிவிக்கிறார் என்றால் இந்திய நிலப்பரப்பில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களுமே, தங்களுக்கு இடையிலான வேறுபாடுகளைப் புறந்தள்ளிவிட்டு, இந்த அபாயக்கட்டத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றும் முயற்சியை இரவு - பகலாக மேற்கொள்ளவேண்டும் அல்லவா.

இந்தியாவின் பன்முகத்தன்மையை யாராலும் அழித்துவிடமுடியாது. அதுமட்டுமல்ல, பன்முகத் தன்மை கொண்ட இந்தியத் துணைக்கண்டம் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டு, கடந்த 75 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது என்பதுதான் உலகநாடுகளில் நமக்கிருக்கின்ற பெருமையும், புகழுமாகும்.

எனவே, நாட்டின் பன்முகத்தன்மையையும், ஜனநாயகத்தையும் மதவெறியர்களிடமிருந்து காப்பாற்றுகின்ற முயற்சியை அனைத்து அரசியல் கட்சிகளும் மேற்கொள்ளவேண்டும். தேர்தல் வெற்றிக்காக மட்டும், திட்டங்கள் வகுப்பதைவிட (Electoral Politics) இன்றையதினம், இந்திய துணைக்கண்டத்தின் பன்முகத்தன்மைகளையும், ஒற்றுமையையும், ஜனநாயகத்தையும் காப்பாற்றித்தீர வேண்டும் என்பதே நாட்டு மக்களின் தலையாய கடமையாக உருவாகியிருக்கிறது.

ஆங்கிலேயரிடமிருந்து விடுதலைபெற்று சற்றேறக்குறைய 75 ஆண்டுகளில் நாட்டிற்கு இன்று ஏற்பட்டுள்ள பேராபத்தைப்போல் கடந்தகாலத்தில் என்றும் ஏற்பட்டதில்லை. இந்தியத் துணைக்கண்ட நில ப்பரப்பின் பன்முகத்தன்மை கருதி உருவாக்கப்பட்ட இந்திய அரசியல்சட்டத்தின் நோக்கங்களும், சிந்தனைகளும் திட்டமிட்டு பாரதீய ஜனதாக்கட்சியின் ஆட்சியில் சிதறடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. "இந்துத்துவா" கோட்பாட்டின் மூலம் இந்திய நிலப்பரப்பில் தொன்றுதொட்டு பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்துவரும் மக்களின் வாழ்வியல் முறைகளை மாற்றியமைக்க வேண்டுமென்கின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். மேலும்,

"இந்துத்துவா" கோட்பாடு என்பது முந்திய வேதகால "மனுதர்மம்", "சனதானம்" ஆகிய ஆரிய கோட்பாடுகளின் மறுவடிவம் தான் என்பதில் ஐயமில்லை. தற்பொழுது காலச்சூழ்நிலைக்கேற்ப வேதகால கோட்பாடு களுடன்பெரும்முதலாளித்துவ சக்திகளையும் (Corporates) இணைத்துக் கொண்டு, "இந்து ராஷ்ட்ரத்தை" உருவாக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு ஆளுநர் அடிக்கடி சனாதனத்தின் பெருமைகளைப் பற்றி தொடர்ந்து பேசிவருவதன் நோக்கம் ஆரியக் கலாச்சாரத்தின் மீது உள்ள அளவற்ற பற்றின் பிரதிபலி ப்பேயாகும் என்பதில் ஐயமில்லை! ஒன்றிய அரசினை இயக்கும் சக்தியாக ராஷ்ட்ரிய சுயம் சேவக் சங் (ஆர்.எஸ்.எஸ்.) அமைப்புச் செயல்பட்டுவருகிறது என்பது வெளிப்படையாகும். இவர்களது இந்துத்துவாக் கோட்பாட்டின் காரணமாக சிறுபான்மை மக்கள் அச்சத்தோடு வாழவேண்டிய நிலை படிப்படியாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த இக்கட்டான, ஆம்! நெருக்கடியான சூழ்நிலையில் தமிழ்நாட்டில், "சமூக நீதிக் கோட்பாட்டின்" அடிப்படையில் "எல்லோருக்கும் எல்லாம்" என்ற அடிப்படையில் "திராவிடமாடல்" ஆட்சி கழகத்தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் கண்டு, இந்தியாவில் இணைந்துள்ள மற்ற மாநிலங்களும், இந்தக் கோட்பாட்டின் தாக்கத்தை உணர்ந்து அங்குள்ள ஆட்சியாளர்கள் இந்தக் கோட்பாட்டைப் பின்பற்றத் தொடங்கியுள்ளார்கள்.

ஆங்காங்கு வாழும் வேறுபட்ட மக்களும் இதை வரவேற்கத் தொடங்கிவிட்டார்கள். இந்த வரவேற்பைக் கண்ட ஒன்றிய அரசு விரைவாக தங்கள் நோக்கங்களைச் செயல்படுத்த பெரும் முயற்சி மேற்கொண்டுள்ளது. ஒன்றிய அரசின் அதிகாரங்களை மூர்க்கத்தனமாகப் பயன்படுத்தவும் அவர்கள் முயற்சி மேற்கொண்டுள்ளார்கள்.

இந்த இக்கட்டான அரசியல் சூழ்நிலையில் நாட்டு மக்களை திராவிட இயக்க சித்தாந்த அடிப்படையில் அணிதிரட்டி "இந்துத்துவா" என்னும் வேதகால கோட்பாட்டின் தீயவிளைவுகளையும், பிரித்தாளும் சூழ்ச்சியையும், ஆண்டான் அடிமை முறையையும், கண்மூடித்தனமான மூடப்பழக்கங்களையும், மக்களிடம் எடுத்து விளக்கி, மக்களை சித்தாந்த அடிப்படையில் அணிதிரட்ட வேண்டிய தலையாய பணியே இன்றைய அவசர அவசியம் எனவே கழகத் தலைவர் தலைமையில், மதவாத ஆதிக்கசக்திகளை எதிர்த்து திராவிட கோட்பாட்டிற்கு வெற்றியைக் குவித்திட சித்தாந்தப் போர்க்களம் நோக்கி அணிதிரள்வோம். அதுவே இன்றைய நமது கடமை என்பது மட்டுமல்ல, நாட்டுமக்களின் முழுமுதல் கடமையுமாகும்!!

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை

ம.நீ.வ.து.ந.க.எண்.பி1 /0291 /2023

இரு உறை குறுகிய கால முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

வ. எண்	பணியின் விவரம்	பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்)	முன் வைப்புத் தொகை	ஒப்பந்திற்கான தகுதியுள்ள வகுப்பு
1	மண்டலம் - 6ல் ஸ்டீபன் ரோட்டில் உள்ள கூக்ஸ் ரோடு முதல் ஓட்டேரி நல்லா வரை மழைநீர் தேங்குவதை தடுக்க மழைநீர் வடிகால் அமைக்கும் பணி	ரூ. 190.52	பணியின் அலுவலக மதிப்பில் 1%	வகுப்பு - 1

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் 20.07.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் https://tntenders.gov.in
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் 21.07.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3558 / ஒப்பந்தப்புள்ளி / 2023
கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை

ம.நீ.வ.து.ந.க.எண்.பி1/0291-1/2023

இரு உறை குறுகிய கால முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

வ. எண்	பணியின் விவரம்	பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்)	முன் வைப்புத் தொகை	ஒப்பந்திற்கான தகுதியுள்ள வகுப்பு
1	மண்டலம் - 6ல் ஸ்டீபன் ரோட்டில் வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் பம்ப் மற்றும் மின்சார ஏற்பாட்டுடன் மழைநீர் தொட்டி அமைக்கும் பணி	ரூ. 211.57	பணியின் அலுவலக மதிப்பில் 1%	வகுப்பு - 1

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் 20.07.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் https://tntenders.gov.in
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் 21.07.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3559 / ஒப்பந்தப்புள்ளி / 2023
கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்